பெரியார் அவர்களுக்கு

நமது

# விடைகளும் :: வினாக்களும்

57/1.53

என் கடன் பணிசெய்து கிடப்பதே

Q2
N53

திருக்கூட்டம், குன்றக்குடி.

C.No. 821
26.11.27

# குறள் அறம்

" கற்கக் கசடறக் கற்பவை. கற்றபின்,
நிற்க அதற்குத் தக!"

" கற்றதனால் ஆய பயன்என்கொல் வால்அறிவ
நல்தாள் தொழாஅர் எனின் ?"

—திருவள்ளுவர்

# பொதுமக்களுக்கு

அன்புடையீர்,

“பக்தர்களுக்குப் பகுத்தறிவு வினாக்கள்” என்ற தலைப்பில் பெரியார் (உயர்திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர்) அவர்கள் விடுத்த வினாக்கள் 7 – 10 – 1952 ‘விடுதலை’ தினத்தாளில் வெளிவந்தன. அவற்றிற்கு நாம் அனுப்பிய விடைகளை ‘விடுதலை’ வெளியிடவில்லை.

போகட்டும்; நாம்தான் விடை அனுப்பி யிருக்கிறோமே அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது மறுக்க வேண்டும். இல்லாவிட்டால் வினா எழுப்பி விடையிறுக்கப்பட்ட அந்த விஷயங்களைப்பற்றி மேலும் சர்ச்சைசெய்யாமலாவது அமைய வேண்டும். இல்லையா? ஆனால் விடைகளின் மூலம் தெளிவுபடுத்தப்பெற்ற விஷயங்களையே அவர்கள் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டி தமிழ் மக்களையும், தமிழர் பண்பாட்டையும் இழித்துப் பழித்து ஏசி நிற்கிறார்கள்.

நாம் சில வினாக்களை எழுதிப் பெரியார் அவர்களுக்கு நேரிலும், அஞ்சல் வழியிலும் சேர்ப்பித்தோம். ‘விடுதலை’ ஆசிரியருக்கும் அனுப்பினோம். அவற்றிற்கு இன்றுவரை விடை கிடைத்திலது.

ஆகவே நமது விடைகளையும் நமது வினாக்களையும் இதன் மூலம் பொது மக்களின் முன் வைக்கிறோம், உண்மை வெளிப்படுவதற்காக.

இந்நிலையில் நமது அருள்நெறித் திருக்கூட்டத்தைப் பற்றிச் சில வார்த்தைகள்: விருப்பு வெறுப்பற்று நேரிய வழியில் எவருடைய நியாயமான சுதந்திரத்திற்கும் இடையூறு செய்யாமல் நடப்பது நமது போக்கு. எனவே தான் நாம் பிறர் நடத்தும் கூட்டங்களில் சென்று கேள்விகள் கேட்பதில்லை. நமது கூட்டத்தில் கேள்விகள் கேட்கப்பட்டாலும் நேரில் பதில் சொல்லுவதில்லை. ஆனால் வந்த கேள்விகள் அனைத்திற்கும் பதில் எழுதியனுப்புகின்றோம்.

யாரும் அஞ்சல் வழியாக முகவரி எழுதிய முத்திரை உறையுடன் வினா அனுப்பலாம். நியாயமான ஐயத்தின் அடிப்படையில் எழுந்த வினாக்களுக்கு விளக்கமான விடையும், அங்ஙனமில்லாதவற்றிற்குச் சுருக்கவிடையும் அனுப்புகின்றோம்.

**எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!**

இங்ஙனம்,

குன்றக்குடி
6-12-52.

சா. கணேசன்
எஸ். மீனாட்சிசுந்தரம்
செயலாளர்கள்.

## [விடுதலையில் 7-10-52 ஆம் நாள் பெரியார் கேட்டிருக்கும் பகுத்தறிவு வினக்களுக்கு நாம் அனுப்பிய விடைகள்]

கேள்வி : 1 கடவுள் என்ற வார்த்தை தோன்றி எவ்வளவு காலம் இருக்கும்?

பதில் : மனிதன், என்று அறிவுக்கண் கொண்டு உலகத்தைப் பார்த்து அவற்றின் அமைப்பிலே இருக்கும் அற்புத ஆற்றலை உணர்ந்தானே அன்று கடவுள் என்ற சொல் தோன்றிற்று.

கேள்வி : 2 'கடவுள் என்றால் என்ன?' என்று எப்படிப் பட்ட ஆஸ்திகனும் சொல்ல முடிவதில்லை; ஏன்?

பதில் : சொல்ல முடிவதில்லை என்று உங்களுக்குச் சொன்னவர் யார்? நூற்றுக்கணக்கான மொழிகளில் ஆயிரக்கணக்கான பெரியோர்களால் விளக்கப் பெற்றுக் கோடிக்கணக்கான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்றிருக்கிறதே! உதாரணமாக:

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

என்ற திருவாசகத்தை எடுத்துக்கொள்க!

கேள்வி : 3 ஒவ்வொரு ஆஸ்திகனும் தனக்குப் புரியாத ஒன்றையே - தன்னால் தெரிந்துகொள்ள முடியாததும் பிறருக்கு விளக்க முடியாததுமான ஒன்றையே குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு கடவுள் கடவுள் என்று கட்டி அழுகிறது எந்தக்காரணம் பற்றி?

பதில் : தன்னால் தெரிந்துகொள்ள முடியாதது, பிறருக்கு விளக்க முடியாதது என்று சொன்னது யார் ? எத்தனையோ எளிமையான முறைகளில் கூட எடுத்துச் சொல்லியும் புரிந்துகொள்ள மறுப்பதுடன் அமையாது கடவுள் நம்பிக்கையுடைய மிக மிகப் பெரும்பான்மையோரைத் திட்டுவதால் யாருக்காவது நன்மையுண்டா ?

*கேள்வி : 4 சர்வசக்தியுடைய பூரணத்தன்மை பெற்று எங்கும் நிறைந்திருக்கிற ஒரு கடவுளுக்கு மோட்சம் நரகம் எதற்காக இருக்க வேண்டும்?*

பதில் : கடவுளுக்கு மோட்ச நரகம் உண்டு என்று சொன்னது யார் ? தங்கள் கூட்டத்தாரன்றி வேறுயாரும் சொல்லவில்லை ; சொல்லவும் முடியாது.

*கேள்வி : 5 கடவுள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும்படியான சந்தர்ப்பம் மனிதனுக்கு எப்படி வரும் ?*

பதில் : வரும் என்று சொன்னது யார் ?

*கேள்வி : 6 உலகத்தில் தீமை எப்படி உண்டாயிற்று ? அதை யார் கற்பித்தார்கள் ? தீயகுணம் மனிதனை அடைய காரணம் என்ன ?*

பதில் : மனிதனுடைய அறியாமையால் உண்டாயிற்று. கற்பித்தவர் யாருமில்லை. யான், எனது என்னும் செருக்கின் காரணமாகவே தீயகுணம் மனிதனை அடைகிறது.

*கேள்வி : 7 தீயதைச் செய்துவிட்டுக் கடவுளை வணங்குவதாலோ, பிரார்த்திப்பதாலோ அதன் பயன் எப்படி பரிகரிக்கப்பட்டுவிடும்? தீமையினால் துன்பம் அடைந்தவனுக்குப் பரிகாரம் எப்படி ஏற்படும்?*

பதில் : தீமையின் பயன் போய்விடும் என்று சொன்னது யார்? ஆனால் ஒரு விளக்கம் கேளுங்கள். உலகில் மக்கட் சமுதாயம் வாழ மன்னிக்கின்ற பண்பாடு தேவை. இதனைத்தானே நீங்கள் அறைகுறையாகப் பாராட்டுகின்ற திருவள்ளுவர் "இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்" என்று சொல்லிவைத்தார். இப்படி சொல்லியது மனிதனுக்காக அல்லவா? அப்படியானால் அன்புருவமாக நிற்கிற ஆண்டவனுக்கு மன்னிக்கிற பண்பாடு தேவையில்லையா? தீமையைச் செய்தவன் உண்மையிலேயே தன் செயலை நினைந்து வருந்துவானேல் அதனாலான துன்பம் நீங்கப்பெறுவது உலக இயற்கைதானே.

*கேள்வி : 8 தீமை செய்தவர்கள் கடவுளை வணங்கிப் பிரார்த்திப்பதன் மூலம் தீமைக்குண்டான பலனை அனுபவிக்க முடியாமல் போய்விடுவார்கள் என்றால் தீமை எப்படி? எப்பொழுது உலகைவிட்டு அகலுவது?*

பதில் : தற்காலத்தில் மனோதத்துவ அறிஞர்களும், மனத்தை மாற்றினாலன்றி வெறும் தண்டனையின் மூலம் தீமை செய்பவர்களை திருத்த முடியாது என்று உறுதியாகக் கூறுகிறார்கள். பிரார்த்தனையின் மூலம் யான் எனது என்னும் செருக்கு அகலும். அதனால் மனம் செம்மையாகும். மனம் செம்மையானால் சொல்லும், செயலும் திருந்தும். மக்கள் மனமெலாம் செம்மையாகி விட்டால் தீமை தானாகவே உலகிலிருந்து விடைபெற்றுக் கொள்ளும்

*கேள்வி :, 9 எத்தனையோ கோடிக்கணக்கான வருஷங்களாக கோடிக்கணக்கான மக்கள் தீமைக்காக மன்னிக்கப்பட்டும் தீமைக்காக தண்டிக்கப்பட்டும் உலகில் இன்றும் நாளையும் இனியும் வெகுகாலத்திற்கும் தீமை இருந்துகொண்டே வருகிறதென்றால் இதுவரையில் தண்டனையும் மன்னிப்பும் என்ன பலனைக் கொடுத்து வந்திருக்கின்றன?*

பதில்: உலகம் இருக்கும்வரை தீமையும் நன்மையும் கலந்தே இருக்கும். அற்புதமான மாளிகையில் தினமும் கூட்டிப் பழைய குப்பைகளைப் போக்கினலும் நாள்தோறும் புதிய குப்பை பெருகுவது நியதி. அதனைக் கூட்டவேண்டுவது முறையாகும். அதேபோல இப்பொழுது நல்லவர்களாக இருப்பவர்கள் முன்னர் தீமை செய்து மன்னிக்கப்பெற்றும் தண்டிக்கப்பட்டும் திருந்தினவராவர். எண்ணற்ற உயிர்களில் இந்நிலையை அடையாதவர்கள் இன்னும் தீமைசெய்யக் காண்கின்ரேம். எனவே மன்னிப்புப் பயன்தரவில்லை என்று கருதுவது பிழை.

*கேள்வி: 10 தீமையின் கொடுமையை மக்கள் அனுபவிக்காமல் இருப்பதற்கு என்னதான் வழி?*

பதில்: பூரணமாகத் தன் நிலையை உணர்ந்து பிழைக்கு இரங்கி ஆண்டவனை நோக்கி மனம் கசிந்துருகி அழுவதுதான் வழி. மேலும் தீமையைத் தீமை என்று உணர்தலும் வேண்டும்.

*கேள்வி: 11 தீமையைச் செய்தவன் மன்னிப்புப் பெற்ருே தண்டனை அடைந்தோ தன் செய்கைக்குப் பரிகாரம் பெற்றுக்கொள்கிருன் என்றே வைத்துக்கொள்வோம். ஆனல் அந்தப்படி செய்யப்பட்ட தீமையால் தீமை அடைந்தவருக்கு இந்தக் கடவுள் என்ன பரிகாரம் செய்கிருர்?*

பதில்: தீயன செய்வோரால் தீமை அடைந்தவர்கள் இருவகையினராவர். அறியாமையே உருவமாகிய ஒரு சாரார், தம்மைப்போல் இருக்கின்ற மற்ருெரு சாராருக்குச் செய்வது ஒருவகை, நல்லனவே எண்ணிச் சொன்ன நல்லவர்களுக்கு செய்வது ஒருவகை. எனவே தீமை அடைந்தவர்களில் நல்லவரும் உண்டு. கெட்டவரும் உண்டு. தீமையை அடைந்த நல்லவர்கள் தீயசக்தி தாக்கும்பொழுதும் மாறுபடாமல் பல்லூழி காலங்களுக்கும் தன்

821

எண்ணம் வாழச் செய்துவிட்டு நல்லருளைப் பெற்றார்கள். தீயவர்கள் தமது தீமைக்காகத் தண்டனை பெற்றார்கள்.

*கேள்வி : 12* *தீமை அடைகின்ற மனிதன் கடவுள் சித்தத்தால்தான் தீமை அடைகிறான் என்று தானே சொல்லவேண்டும்? அப்படியில்லாவிட்டால் கடவுளின் காவலை மீறி ஒரு மனிதனுக்கு ஒரு மனிதன் தீமை செய்துவிட முடியுமா?*

பதில் : இல்லை; மனிதன் தனது முன்வினைக்கு ஈடாக நன்மையையோ அன்றித் தீமையையோ அடைகிறான். ஒருவனுக்கு மற்றொருவன் தீமைசெய்துவிட முடியும் என்று சொல்வது அறியாமையாகும்.

*கேள்வி : 13* *கடவுள் சித்தத்தால் ஒரு மனிதன் தீமையை அடைகிறான் என்றால் பிறகு தீமை செய்தவனுக்கு தண்டனை எப்படி வரும்? அவன் எதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்?*

பதில் : கடவுளின் சித்தமறிந்து தண்டனையை நிறைவேற்றும் தகுதியும், கடமையும் மனிதனுக்கு இல்லை. மன்னிப்பு வேண்டல் விளைவு கருதியல்ல; ஆனால் வினை கருதியே. அதனால் அவன் தன் பிழை உணர்ந்து திருந்துவான்.

*கேள்வி : 14* *கடவுள் சித்தம் இல்லாமல் தனிப்பட்ட முறையில் தன் சொந்தத்தில் ஒரு மனிதன் ஒரு காரியத்தை ஒருவருக்கு செய்துவிட முடியுமா?*

பதில் : காரியத்தின் பெருமை, சிறுமை நோக்கி முடியவும் கூடும். முடியாமல் போகவும் கூடும்.

*கேள்வி : 15* *கடவுள் மனிதன் மூலமாகவே தன்னுடைய ஆட்சியை நடத்துகிறார் என்பதே பெரும்பாலான ஆஸ்திகர்களின் முடிவு. அதனாலேயே பிச்சை பெற்றவனும் கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். உத்தியோகம் பெற்றவனும் கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். ஏதாவது ஒரு கட்டத்தில் நெருக்கடியிலிருந்து தப்பித்தவனும் கடவுள் தன்னை தப்பித்து விட்டார் என்று சொல்லுகிறான். ஆகவே எந்த நன்மைக்கும் தீமைக்கும் மனிதன்மீது பொறுப்பை சுமத்துவது எப்படி முடியும்?*

பதில் : கடவுள் மனிதன் மூலமாக ஆட்சியை நடத்துகிறார் என்பது ஆஸ்திகர்களின் முடிவல்ல. எந்தப் பிரமாணம் கொண்டு தாங்கள் அப்படி முடிவு செய்தீர்கள்? பிச்சை, உத்தியோகம், தப்பித்துக் கொள்ளல் முதலிய அனைத்திற்கும் நீங்கள் புரிந்து கொள்ள மறுக்கும் அந்த ஊழ்தான் காரணம். ஆகவே, தான் செய்த நன்மைக்கும் தீமைக்கும் மனிதன் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

*கேள்வி : 16* *கடவுள் சர்வ வியாபியாய் இருக்கும் போதும் மனிதனுடைய ஒவ்வொரு எண்ணங்களையும் காரியங்களையும் கவனித்து வருகிறவராய் இருக்கும்போதும் கடவுளுக்கு தனிப்பட்ட பிரார்த்தனை எதற்காகச் செய்யப்பட வேண்டும்? அதற்காக இடம், பொருள், நேரம் எதற்காகச் செலவு செய்ய வேண்டும்.*

பதில் : கடவுள் எங்கும் நிறைந்தவராயும் நம்முடைய எண்ணங்களையும், செயல்களையும் கவனித்து வருபவராயும் இன்ப்பதால்தான் நாம் பிரார்த்தனை செய்யவேண்டியது இன்றியமையாதது. உணவால் உடல் வளமடைவதைப்போலப் பிரார்த்தனையால் உயிர் வளம்பெறுகிறது. இடம், பொருள், காலம் எல்லாம் ஒரு திட்டமாயிருந்தால்தான் ஒழுங்கு ஏற்படும்.

*கேள்வி : 17 அவர் தெரிந்துகொள்ள முடியாத எந்தக் காரியத்தை பிரார்த்தனையினாலும் ஜபத்தினாலும், தொழுகையினாலும் அறிவிக்கமுடியும்?*

பதில் : ஹிந்துக்கள், கிறிஸ்தவர், இஸ்லாமியர் ஆகியோர் வழிபடுவதை முறையே பிரார்த்தனை, ஜபம், தொழுகை எனப் பிரித்துத் தாங்கள் குறிப்பிடுவதைத் தெரிந்துகொண்டோம். இவர்கள்யாரும் கடவுளால் தெரிந்துகொள்ள முடியாததைத் தெரிவிப்பதற்காகவே வழிபாடு என்று சொல்வதில்லை. அவ்விதப் பற்றுடன் வழிபாடு செய்வது கூடாது என்பதே எம்மதப் பெரியோர்களுடையவும் கருத்து. மேலும் யாராவது அங்ஙனம் செய்வதால் நஷ்டம் ஒன்றுமில்லை. மனத் திருப்தியாவது கிடைக்குமல்லவா? வழிபாடெல்லாம் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ளுவதற்காகவேதான்.

*கேள்வி : 18 பிரார்த்தனைக்கும் ஜபத்திற்கும் இரங்குகிறவர் என்றால், கடவுள் தற்பெருமைக்காரரா? அல்லது பிரதிபிரயோஜனம் பெறும் வியாபார் முறைக்காரரா?*

பதில் : பிரார்த்தனையின் பயன் மனம் தூய்மை பெறுதல் அன்பில் பொருந்துதல் இதனால் நன்மையை நாடும் உள்ளமும் நல்லன செய்யும் ஆற்றலும் வளர்கின்றது. ஆண்டவன் நல்லனவற்றை ஆதரிக்கின்ற பாணியில் அருளுகின்றான். மனிதன் நல்லவனாவதற்காகப் பிரார்த்தனை செய்கின்றானே ஒழிய ஆண்டவன் விரும்புவதற்காகச் செய்யவில்லை. கடவுளும் பிரார்த்தனையையும் புகழ்மொழிகளையும் விரும்பி நிற்கின்றானில்லை. கடவுள் ' பெருமைக்கு ஆசைப்படுகின்றவன் இல்லை. கடவுள் அன்பிற்சிறந்த அடியவர்கட்கெல்லாம் எளியனாக விளங்குகின்றான். கடவுள் மனிதனிடத்திலிருந்து எவ்வித பிரதி பிரயோஜனத்தையும் - எதிர்பார்த்ததில்லை - எதிர்பார்க்கவும் இல்லை - எதிர்பார்க்கப்போவது மில்லை. ஆனால் நன்றி

அறிந்து செலுத்திய உணர்ச்சியைப் பழகிய மனித உள்ளம் தமது நன்றியின் சின்னமாக தமது வாழ்க்கைக்கு முதலாக நிற்கும் கடவுளுக்கு விழி பாட்டை ஏதோ . ஒருபெயரிட்டுச் செய்கிறுன்.

*கேள்வி : 19* *இவ்வளவு காலப் பிரார்த்தனையும் ஜபமும் தொழுகையும் மனிதனை ஏதாவது ஒரு வழியில் யோக்கியமாய் நடப்பதற்குப் பயன்பட்டிருக்கிறதா ?*

பதில் : ஏதாவது ஒரு வழியில் என்ன? நம்பிக்கையும் உறுதியுமுள்ள ஹிந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய அன்பர்கள் யாவருக்கும் பிரார்த்தனையும் ஜபமும், தொழுகையும் எல்லா வழிகளிலும் பெரிதும் பயன்பட்டிருக்கிறது. உதாரணமாக நாட்டுரிமை வாங்கித்தந்த இந்தியத் தந்தை காந்தியடிகள் தமது இலட்சியங்களையெல்லாம் பிரார்த்தனையின் மூலமாகவே வெற்றிகொண்டார்கள், பிரார்த்தனை எத்தனையோ மக்களை நன்னெறியில் ஆற்றுப் படுத்தி மனத்தூய்மை அளித்து ஒழுக்கத்தில் சிறந்த உத்தமர்களாக வாழச் செய்திருக்கிறது. செய்துகொண்டும் வருகிறது.

*கேள்வி : 20* *நன்மைக்கும் தீமைக்கும் கடவுளே கர்த்தராயிருக்கும்பொழுது உலகில் நன்மை தீமை இல்லாமல் இருக்கச்செய்ய முடியாதா ?*

*கேள்வி : 21* *இதை எவராவது சில மக்கள் அடைந்து தான் தீரவேண்டுமா ? ஏன் அப்படி ?*

பதில் : 6, 8 வினுக்களின் விடையைப் பார்க்க !

*கேள்வி : 22* *நமது பிரார்த்தனையும் தொழுகையும் நமக்கு தீமை அணுகாமல் செய்ய முடியுமா ? அப்படி செய்தாலும் அத்தீமை உலகில் உள்ளவரை ஏதாவது ஒரு மனிதனையாவது அணுகித் தானே தீரவேண்டும் ? ஆகவே மனித சமு*

*தாயம் பொதுவில் தீமையிலிருந்து எப்படித் தப்பமுடியும் ?*

பதில் : உண்மையான நெஞ்சந்தோய்ந்த பிரார்த்தனையால் தீமை அணுகாமல் காத்துக்கொள்ள முடியும். ஆனால் ஒன்றுமட்டும் நினைவிருக்கட்டும். துன்பம் அணுகாமலே இருக்கவில்லை. இது உலக நியதி. ஆனால் பிரார்த்தனையில் மனத்தைச் செலுத்துகின்ற பண்பட்ட உள்ளமுடையவர்கள் துன்பத்தால் துன்புறுவதுமில்லை. அனுபவிப்பதுமில்லை. தீமையிலிருந்து தப்பவேண்டுமென்ற எண்ணமும் அதற்குரிய சாதனமாகிய பிரார்த்தனையில் ஈடுபடும் ஆர்வமும் மிக எளிதில் தப்பச் செய்யும். நீற்றறையிலிடப்பட்ட திருநாவுக்கரசரும் சிலுவையில் அறையப்பட்ட ஏசுநாதரும், கல்லால் அடிபட்ட நபிகள் நாயகமும் துன்பப்படுத்தப்பட்டார்கள். அத்துன்பம் அவர்களை யாதொன்றும் செய்யவில்லை என்பதும் அவற்றை அவர்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை என்பதும் சரித்திரம் காட்டும் உண்மை.

*கேள்வி : 23 தீமையினால் மக்கள் கஷ்டப்படுவார்கள் — துன்பப்படுவார்கள் என்பதைக் கடவுள் அறிந்திருக்க மாட்டார் என்பதை யாராவது நம்ப முடியுமா ?*

பதில் : தீமையால் மக்கள் கஷ்டப்படுவார்கள் என்பதைக் கடவுள் மிக நன்றாய் அறிகிறார். மக்கள் நல்வழியிற் செல்லும் நாளை எதிர்நோக்கி மறக்கருணை காட்டி நிற்கிறார்.

*கேள்வி : 24 அப்படியிருக்கும்போது சர்வ சக்தியும் சர்வ தயாபரத் தன்மையும் கொண்ட கடவுள் உலகத்திற்குத் தீமையை ஏன் சிருஷ்டித்தார் ?*

பதில் : தீமையையே சதா சிந்தித்துக்கொண்டிருக்கும் தாங்கள் தீமை கடவுளுடைய சிருஷ்டி அல்ல. மனிதனுடைய அறியாமையிலிருந்து எழுவது என்பதை இனியாவது தெரிந்துகொள்ளுங்கள்.

கேள்வி : 25 விஷப் பூச்சி, விஷக் கிருமி, விஷ ரோகம், தரித்திரம், துன்பம், கொலைத் தொழில். கொள்ளைத் தொழில், திருட்டு, பொய், வஞ்சகம், விபசாரம், கஷ்டமான வேலை, அடிமைத்தனம், கொடுங்கோலாட்சி, கடவுளை மறுப்பது, கடவுளை வைவது முதலாகிய தீமை என்னும் விஷயங்களை எல்லாம் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்?

பதில் : சபாஷ்! பெரியாரவர்களே சபாஷ்! விஷப் பூச்சி விஷக் கிருமி முதலியன படைப்பின் அமைப்பிலேயே அமையப் பெற்றன. தாங்கள் அடிக்கடி சொல்லிவரும் "தீமை" எத்தகையது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அமையப் பெற்றவை. தரித்திரம், துன்பம் முதலியன எல்லாம் உழைப்பின்மையாலும், அறியாமையாலும் அடைந்தவை. நல்ல காலமாக இத்துணை வயதுக்குப் பிறகாவது கடவுளை மறுப்பதும், வைவதும், தரித்திரம், விஷப் பூச்சி, விஷக் கிருமி, விஷ ரோகம் போன்ற தீமையான ஒன்று என உணர்ந்தீர்களே நன்றி! நன்றி! கடவுளை மறுப்பதும் வைவதும் கூட அறியாமையின் விளைவுதான். கடவுளின் சிருஷ்டி அல்ல. கடவுள் கொடுத்த அறிவைத் தவறான வழியில் பயன்படுத்துவதால் விளைவன.

கேள்வி : 26 இவற்றால் யாராவது ஒருவர் கஷ்டப்படுகிறாரா? இல்லையா? இவற்றால் கடவுளுக்கு என்ன லாபம்?

பதில் : கஷ்டப்படுவது உண்மை. இக்கஷ்டத்தால் கடவுளுக்கு நேரிடையான இலாபம் இல்லை. கரும்பு பிழியப் பயன்படுதல்போல இக்கஷ்டத்தால் அறியாமை நீங்கி நல்லறிவு பெற்று மக்கள் நற்பயன் அடைகின்றனர். இதனைப் பார்த்து கடவுள் மகிழ்வது இலாபம்.

கேள்வி : 27 பூகம்பம், எரிமலை, வெடிப்பு, புயல் காற்று, கடுமழை ஆகிய காரியங்களை ஏன் சிருஷ்டித்தார்?

பதில்: பூகம்பம், எரிமலை, வெடிப்பு முதலாயின நிலத்தியல்பையும் கால இயல்பையும் பொறுத்து நிகழ்வன. இவற்றைக் கடவுள் சிருஷ்டி என்று கொள்ளுவதிலும் தீங்கு இல்லை. ஏனெனில் தீய சமுதாயத்தினை வளர விடுவதும் வாழ விடுவதும் உலகுக்கு நன்மைதரும் செயலல்ல. ஆதலால் அறியாமையின் காரணமாக தீமையே செய்யும் குழுவினரை அழித்து நன்மையைக் காத்தற்காக கடவுள் சிருஷ்டித்தார் எனக்கருதல் பிழையன்று.

கேள்வி: 28 கெட்ட மனிதர்கள் துன்பம் அனுபவிக்க என்று சொல்லப்படுமேயானால் கெட்ட மனிதர்களை ஏன் சிருஷ்டித்தார்?

பதில்: 6-வது வினாவிற்குரிய விடையை மீண்டும் ஒரு முறை பார்க்க!

கேள்வி: 29 நல்ல மனிதன் கெட்ட மனிதன் என்று சொல்லமுடியாத குழந்தைகள் மற்ற ஜீவன்கள் ஆகியவைகளுக்கும் துன்பம் அடையும்படி ஏன் செய்தார்?

பதில்: உயிர்கள் தாம் தாம் அனுபவிக்கின்ற இன்ப துன்பங்களுக்கு தாம் தாம் முன்னைய பல பிறவிகளில் செய்த வினைகளே காரணம் என்பதை தாங்கள் ஏற்றுக்கொண்டீர்களானால் இந்த வினாவிற்கு விடைபுரியும்.

கேள்வி: 30 மதத்திற்கு அரசாங்கம் பாதுகாப்பாயிருக்கிறதா? அல்லது அரசாங்கத்திற்கு மதம் பாதுகாப்பாயிருக்கிறதா?

பதில்: மதமும் அரசாங்கமும் உயிரும் உடலும் போல ஒன்றுக்கொன்று துணையாய்அமைந்து அதனதன் நோக்கத்தைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டும். இரண்டும் மக்கட் சமுதாயத்திற்குப் பாதுகாப்பாய் இருக்கின்றன. தாங்கள் இப்படிக்கேள்வி கேட்பதால் இரண்டும் வேண்டாம் என்பது தங்கள் கருத்தா?

# நாங்கள் கேட்கிறோம்

1 மொகஞ்சதாரோ ஹரப்பா முதலிய புதையுண்ட நகரங்களின் நாகரிகம் ஆரிய நாகரிகமா? திராவிட நாகரிகமா? திராவிடநாகரிகமானால் அங்கு கண்டெடுக்கப்பட்ட சிவலிங்க உருவங்கள் ஆரியர்கள் வருவதற்கு முன்பு நமக்கு உருவ வழிபாடு உண்டு என்பதை நிரூபிக்கவில்லையா? இத்திருஉருவங்களைப் பண்டைத் திராவிடர்கள் கோவிலில் வைத்துத்தானே வழிபட்டிருக்க வேண்டும்? எனவே கோவில்களும் உருவ வழிபாடும் ஆரியர்களால் புகுத்தப் பட்டன என்பது பொருந்துமா?

2 தமிழ் மொழியின் வரலாற்றில் சிறந்த பொற்காலமாக கருதப்படும் சங்ககாலத்து வாழ்க்கையைப் பற்றித் தங்கள் கருத்து என்ன? சங்ககாலத்து மக்கள் அறிவுத்திருவும், வீரத்திருவும் ஒருங்கேபெற்றுச் சிறப்புற வாழ்ந்ததைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். அக்கால மக்களது வாழ்க்கை கடவுட் பற்றிலும் உருவ வழிபாட்டிலும் தோய்ந்திருந்ததை இன்றும் தமிழர்கள் தமதெனப் பாராட்டிப் பெருமைகொள்கின்றனர். சங்க இலக்கியங்களும், தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களும் இதற்கு சான்று பகருகின்றன. அங்ஙனமிருக்கத் தாங்கள் அதற்கு மாறுபடப் பேசுவது ஏன்?

3 மாற்றார் தமிழகத்தில் அடிவைக்காத வண்ணம் சிறப்புற ஆண்ட தமிழக மன்னர்கள் ஆட்சிமுறையைப்பற்றி தங்கள்கருத்து என்ன? இன்றும் தமிழன் வீரத்திற்குப் பெருமையாக இமயத்திற் கொடிபொறித்தோம், கங்கை கொண்டோம் என்று தானே சொல்லுகிறோம்? அத்தகைய பெருமைபடைத்த தமிழ் மன்னர்களால் அமைக்கப்பெற்ற திருக்கோவில்கள் மட்டும்

வேண்டாதனவா? புலிகேசியைப் போர் முனையில் முறியடித்த நரசிம்மவர்மன் அல்லவா காஞ்சிக் கோவிலை எடுத்தான்? அவ்வீர உள்ளம் இறைவனிடத்தில் குழைந்ததை தாங்கள் மறுக்க முடியுமா?

4 தமிழ்நாட்டின் பெருமையை வெளிநாட்டவரும் உணர்ந்து வியக்கும்படியாக தமிழர் கலை, நாகரிகம், பண்பாடு இவற்றிற்குச் சிறந்த ஓர் அளவு கருவியாக இருக்கும் இலக்கியம், சிற்பம் கோவில்கள் அனைத்தையும் அழிக்கவேண்டும் என்று தாங்கள் கருதுவதை அறிஞர் உலகம் ஒப்புக்கொள்ளுகிறதா? அப்படி ஒப்புக்கொள்ளும் அறிஞர்கள் யார் யார்? எந்நாட்டவர்?

5 கடவுள் மறுப்புக்கும் உருவ வழிபாட்டின் மறுப்புக்கும் இலக்கியங்களிலிருந்து ஆதாரங்கள் காட்ட முடியுமா?

6 திருக்கோவில்கள், தேவார திருவாசகம் முதலியன தாங்கள் எண்ணுகிறபடி பார்ப்பனக் குலத்திற்கு அரண்செய்வதனுல் வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள். இக்கருத்துக்கு தக்க ஆதாரங்கள் எடுத்துக் காட்ட முடியுமா?

7 புராணக் கதைகள் இல்லாவிட்டால் கடவுள் இல்லாமல் போய்விடுவாரா? பெரியாரைப் பற்றிய (பொய்யு மெய்யுமான) வதந்திகளை நம்பாததால் பெரியாரே இல்லை என்று சொல்லிவிட முடியுமா? பொய்யும் மெய்யும் கலந்த வதந்திகளைக்கொண்டே பெரியார் அவர்களின் தகுதியையும், குண நலன்களையும் மதிப்பிடுவது சரியா?

8 விஞ்ஞான வளர்ச்சியிலும் பொருளாதாரத் துறையிலும மேம்பட்டு நிற்கும் அமெரிக்காவிலும் சமய வளர்ச்சி பெருகிவருகின்றதை தாங்கள் அறிவீர்களா? அங்கு முப்பதாண்டுகளுக்கு முன்பு 2,28,880 ஆலயங்களும் 465,90,000 வழிபடுவோரும் இருந்ததாகவும்,

தற்சமயம் 2,81,511 ஆலயங்களும் 8,88,30,000 வழிபடுவோர்களும் இருப்பதாக கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே பகுத்தறிவு வளர வளர பக்தியும் வளர வேண்டாமா?

9 இராவணன், நரகாசுரன் முதலியவர்கள் தமிழர்கள் என்று சொல்லுகின்றீர்கள், அவர்களைப்பற்றி தமிழ் நாட்டு வரலாறு பேசுகிறதா? அசுரர், அரக்கர் என்ற சொற்கள் தமிழரைக் குறிக்கும் என்பதற்கு கல்வெட்டு, இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலிய பண்டைத் தமிழர் வரலாறு கூறும் நூல்களில் ஆதாரம் காட்ட முடியுமா?

10 உலகில் ஒவ்வொன்றிலும் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றன. அறிவுடையோர் தீயனவற்றை விலக்கி நல்லனவற்றைக் கொள்ளுதல் வேண்டும். அதுபோல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து பல்கோடி மக்களால் கைக்கொண்டு ஒழுகப் பெற்ற இந்துமதத்தில் சில போலிப்புலமையினால் எழுந்த புராணங்களையே குறிக்கோளாக் கொண்டு பலர் படித்தும் கேட்டும் இராத புராணங்களையே எழுதியும் பேசியும் வருவது சரியா? இதற்காக இந்து மதத்தையே வெறுக்கலாமா?

11 பீநாறிச் சங்கை நுகர்ந்து பார்த்துவிட்டு அதன் துர்நாற்றத்தைக்கொண்டு மலர்கள் இனமே துர்நாற்றமுடையன என்று முடிவு கட்டுவதும் சொல்வதும் நன்மை தருமா? அதைவிடுத்து சமயங்களில் ஊடுருவி நிற்கும் பேருண்மைகளை எடுத்துச் சொல்லுங்கள். அது தங்களுக்கும் நாட்டுக்கும் நன்மை தரும் என்பதை ஏற்றுக்கொள்ளுவீர்களா?

12 உருவ வழிபாட்டில் நம்பிக்கையற்ற தங்களது சிஷ்யர்கள் தங்கள் படத்தை மாட்டிவைத்துக்கொண்டு அதற்கு மாலையிட்டு மரியாதை செய்வது தகுமா? தங்கள் படத்தை ஒருவர் அவமதித்தால் தங்கள்

முகத்தினருக்கு கோபம் வராதா? படம் தங்களை நினைவூட்டுவது போலத்தானே பக்தர்களுக்கு கடவுளுருவம் கடவுளை நினைவூட்டும் சின்னமாக கருதுகின்றனர். அப்படி இருக்க அதை மறுப்பதும் வெறுப்பதும் ஏன்?

13 தாங்கள் ஏன் கருப்புச்சட்டை அணியவேண்டும்? கருப்பு ஏதோ ஒன்றின் அறிகுறி அல்லது சின்னம் என்பதற்காகத்தானே? அப்படித்தானே திருநீறும், திருமண்ணும்? அப்படியிருக்க தாங்கள் சமயச் சின்னத்தை மறுப்பானேன்?

14 தங்கள் கொடியைக் கிழித்து எறிந்தால் கோபம் வருமா வராதா? கோபம் வரும் என்றால் அது ஒரு சிறு துணிதானே? அதன் மதிப்பு எட்டணா அல்லது ஒரு ரூபாய் தானே? அது ஒரு இலட்சியக் கொள்கையின் அடையாளம் என்றால் அப்படித்தானே திருவுருவங்களும்?

15 பூமியின் ஈர்க்கும் ஆற்றலை எந்தப் புலன் உதவி கொண்டும் நேரடியாகக் காண முடியாவிட்டாலும் அந்த உண்மையை மறுக்க முடியுமா? அதைப் போலவே சூரியன் பூமியுள்படத் தனது கிரகங்களை ஈர்த்துக்கொண்டு இயங்குவதைக் காணமாட்டாமையினாலே மறுத்துவிடலாமா?

16 நமது அறிவை நாம் காட்டமுடியுமா? காட்டமுடியாததால் அறிவு என்ற ஒன்றே இல்லை என்று கூறுதல் அறிவுடைமையாகுமா? செயலைக்கொண்டு அறிவுண்டு என்றும் இல்லை என்றும் அளவிடுவதைப் போல அனுமான அளவால் கடவுள் உண்டு என்று சொல்லுவதில் என்ன தவறு?

17 பல்லாயிரம் ஆண்டுகளாக மிக மிகப் பெரும்பான்மை மக்களாலும் அறிஞர்களாலும் உண்டு என்று நம்பப் பெற்று வருவதைத் தாங்கள் இல்லை என்கிறீர்

களே. தாங்கள் அல்லாத மற்ற யாவரும் மூட களா ?

"உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து அலகையா வைக்கப்படும்"

என்ற திருக்குறளைச் சிந்தித்துப் பார்ப்பீர்களா ?

18 கில்லிகன் (*Gilligan*) ஹக்ஸ்லி (*Huxley*) அலெக்ஸிஸ் காரல்(*Alexis Carrel*) டு நுவாய் (*du Noüy*)ஐன்ஸ்டின் (*Einstein*) சர். ஜேம்ஸ் ஜீன்ஸ்(*Sir James Jeans*) சர். ஜே. சி. போஸ் (*Sir. J. C. Bose*) சர். சார்லஸ் ஷெரிங் டன் (*Sir. Charles Sherrington*) மதாம் க்யூரி (*Madam Curie*) சர். சி. வி. இராமன் (*Sir. C. V. Raman*) போன்ற உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானிகள் எல்லாம் கடவுள் உண்டு என்று சொல்லுகின்றார்கள். விஞ் ஞான ரீதியாக விளக்கியும் காட்டுகின்றார்கள். அவர் களிலும் தாங்கள் அறிவாளி என்ற எண்ணமா ? அல் லது அவர்களை நீங்கள் மறுக்கிறீர்களா ? எந்தப் பிர மாணத்தால், எக்காரணம் காட்டி, கடவுள் உண்மை யை மறுக்கின்றீர்கள் ?

19 கதிரவனும் கதிரொளியும் ஒன்றோடொன்று பிரியா திருப்பதைப் போல இறைவனும் அருட்சக்தியும் என் றும் பிரிவிலா திருப்பதையே இறைவன் - இறைவி என்று முன்னைப் பேரறிஞர்கள் உணர்த்தினார்கள். அம்மையப்பன், மாதொரு பாகன், அர்த்தநாரீச்வரன் என்னும் தத்துவம் இதைத்தான் அன்பர்கட்கு உணர்த்துகிறது. இவ்வுண்மை பலகாலும் விளக்கப் பட்டிருந்தும் "கடவுளுக்குப் பெண்டாட்டி ஏன் ?" என்று தாங்கள் கிண்டல் செய்வது நியாயமா ? உங் கள் கூட்டத்தாரல்லாத மிகப் பெரும்பான்மையோ ருடைய பரம்பரையான உணர்ச்சி நிறைந்த உள்ளங் களைப் புண்படுத்துவதால் யாருக்காவது நன்மை உண்டா ?

தமிழ், தமிழர், தமிழ் நாகரிகம், தமிழ்ப்பண்பாடு என்று வானளாவப்புகழ்ந்துபேசும் தாங்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் பண்பாட்டுச் சின்னங்களாகிய கோவில்கள், இலக்கியங்கள் போன்றவற்றை அவநூறு செய்வதன் மூலம் முடியுடை வேந்தர், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த சான்றோர். அருள்கனிந்த அகத்தால் ஆண்டவனை உணர்த்திய அறவோர்கள் ஆகிய தமிழர் பரம்பரைக்கே முட்டாள் பட்டம் கட்டுகின்றீர்களே? இது அடுக்குமா? முறையா?

Q2
N53

…ஸ். காரைக்குடி.

6A
1-86

ம் முவழிபடு
ருக்

Acc. No. 821
dt 26.11.77